1975 மார்ச் 6]

Tamil Nadu Industrial Investment Corporation.

*119. *Q.* THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that there is a steep fall in the profits of the Tamil Nadu Industrial Investment Corporation; and

(*b*) if so, the steps taken or proposed to be taken to improve the state of affairs?

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

திரு. எஸ். நாராயணசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஆதாயம் மிகவும் குறைந்துள்ளது என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இந்நிலையை மாற்றி ஆதாயத்தைப் பெருக்க மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) அண்ட் (இ): 31—3—73 ஆம் தேதியோடு முடிந்த ஒன்பது மாதங்களில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் இலாபம் குறைந்தது. ஆனால் 31—3—74 ஆம் தேதியோடு முடிந்த பன்னிரண்டு மாதங்களில் இலாபம் உயர்ந்திருக்கிறது. கழகம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய சேவைகளை அதிகரிப்பதோடு இலாபத்தில் செயலாற்றுவதற்கு முழு முயற்சி எடுத்து வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: 31—3—75-ஆம் தேதியோடு முடிந்த ஆண்டின் லாபம் எப்படி இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, 31—3—74-ஆம் ஆண்டு முடிவிற்கான விவரம் தான் என்னிடத்தில் இருக்கின்றது. 31—3—74 முடிய "நெட் பிராபிட்" ரூ. 31.44 லட்சம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, டி.ஐ.ஐ.சி. சிட்கோ ஸ்கீம் மூலம் 90 சதம் கிடைப்பதாகச் சொன்னார்கள். இப்போது கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:—தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

THIRU S. NARAYANASWAMY : Sir, is the Hon. Minister aware of the recent trouble created for this Corporation in the Government of India's decision to cancel some of the mortgage loans given to the sick mills as a result of which the Tamil Nadu Industrial Investment Corporation have lost about Rs. 1·55 crores of its Reserve Fund for no fault of its own or that of the State Government ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவரவர்களே, அதைப்பற்றி அண்மையிலே நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அங்கே யுள்ள தொழிலமைச்சர் அவர்களைச் சந்தித்தோம். டி. என். டி. சி. எடுத்திருக்கக் கூடிய சிக் மில்ஸில் வரக்கூடிய கடன்களையெல்லாம் தரு வதாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

Cutting of trees in Government Forests.

*120 *Q*. THIRU GEORGE KOMAGAN (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any rule that teak-wood, Etti, and Ayiani trees in Government Forests should be cut only after a prescribed period of years;

(*b*) if so, the details of the rules; and

(*c*) if not, whether there is any proposal to frame rules in this regard?

அரசு காடுகளில் மரங்களை வெட்டுதல்.

திரு ஜார்ஜ் கோமகன் (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்பு மிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு காடுகளில் வளரும் தேக்கு, ஈட்டி, ஆயினி போன்ற மரங்களைக் குறைந்த அளவு இத்தனை வருடங்கள் கழித்துத்தான் வெட்டலாமென விதியிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அவை யாவை ?

(உ) இல்லையெனில், விதிகளை உருவாக்கும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: (அ), (இ), அண்டு (உ) ஆம்.

தேக்குமரங்களை, குறைந்தது 20 ஆண்டு முதல், அதிக அளவு 80 ஆண்டுகளுக்குப்பின் வெட்ட வேண்டுமென்று அந்தந்த பிராந்திய திட்டப்படி வரை முறை செய்யப்பட்டுள்ளது. ஈட்டி, ஆயினி மரங்களுக்கு அம்மாதிரியான வரைமுறை இல்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the shortage of rainfall, will the Government take special steps not to cut down forests-whether it be teak or any other commodity?